**9** Register No. [ ]

# முதல் இடைப்பருவத் தேர்வு – 2024

நேரம் : 1.30 மணி **சமூக அறிவியல்** மதிப்பெண்கள் : 50

**I. சரியான விடையைத் தேர்வு செய்க.** 11x 1 = 11

1. பரிணாம வளர்ச்சி வரிசையில் நவீன மனிதனின் நேரடி முன்னோர் ............. ஆவார்.
   அ) ஹோமோஹேபிலிஸ் ஆ) ஹோமோ எரக்டஸ்
   இ) ஹோமோ சேபியன்ஸ் ஈ) நியாண்டர்தால் மனிதன்
2. மனிதர்களுடன் மரபணுவியல் நோக்கில் மிகவும் நெருக்கமாக இருப்பது
   அ) கொரில்லா ஆ) சிம்பன்ஸி இ) உராங் உட்டான் ஈ) பெருங்குரங்கு
3. சுமேரியரின் எழுத்து முறை ........... ஆகும்.
   அ) பிக்டோகிராபி ஆ) ஹைரோகிளிபிக்
   இ) சோனோகிராம் ஈ) க்யூனிபார்ம்
4. ஹரப்பா மக்கள் ........... பற்றி அறிந்திருக்கவில்லை.
   அ) தங்கம் மற்றும் பானை ஆ) குதிரை மற்றும் இரும்பு
   இ) ஆடு மற்றும் வெள்ளி ஈ) எருது மற்றும் பிளாட்டினம்
5. பாறைக்குழம்பு காணப்படும் அடுக்கு
   அ) புவிமேலோடு ஆ) கவசம்
   இ) கருவம் ஈ) மேற்கண்ட எதுவுமில்லை
6. பல மில்லியன் ஆண்டுகளுக்கு முன் இந்தியா .......... கண்டத்தின் ஒரு பகுதியாக இருந்தது.
   அ) கோண்டுவானா ஆ) லாரேசியா
   இ) பாந்தலாசா ஈ) பாஞ்சியா
7. பொருந்தாத ஒன்றைத் தேர்ந்தெடுக்கவும்.
   அ) இந்தியா ஆ) அமெரிக்க ஐக்கிய நாடுகள்
   இ) பிரான்ஸ் ஈ) வாட்டிகன்
8. குடவோலை முறையைப் பின்பற்றியவர்கள்
   அ) சேரர்கள் ஆ) பாண்டியர்கள் இ) சோழர்கள் ஈ) களப்பிரர்கள்
9. புவியினுள் உருகிய இரும்பைக் கொண்ட அடுக்கை .......... என்று அழைக்கிறோம்.
   அ) கருவம் ஆ) வெளிக்கரு இ) கவசம் ஈ) மேலோடு
10. ஜீ 8 நாடுகளின் கூட்டமைப்பின் உறுப்பு நாடுகளில் இல்லாத ஒன்று.
    அ) ஜப்பான் ஆ) கனடா இ) ரஷ்யா ஈ) இந்தியா
11. பின்வரும் எம்மாநிலத்தின் கல்வியறிவு தேசிய கல்வியறிவு விகிதத்தைக் காட்டிலும் அதிகமாக உள்ளது.
    அ) ஆந்திரப் பிரதேசம் ஆ) உத்திரப் பிரதேசம்
    இ) தமிழ்நாடு ஈ) இவற்றில் எதுவுமில்லை



Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

II. கீழ்கண்ட வினாக்களுக்கு குறுகிய விடையளி (ஏதேனும் ஏழு) (வினா எண் 21 கட்டாய வினா) 7x2=14

12. பெருங்கற்காலத்தில் இறந்தோரைப் புதைக்கும் வழக்கத்தின் வகைகளைக் கூறு.
13. வரலாற்றுக்கு முந்தைய காலத் தமிழக மக்களின் வாழ்வில் கால்நடை வளர்த்தல் ஏற்படுத்திய தாக்கம் பற்றி எழுதுக.
14. சிகுரட்களின் முக்கியமான பண்புகளைக் கூறுக.
15. ஹமுராபியின் சட்டம் முக்கியமான சட்ட ஆவணமாகும். விவரி.
16. ஆழிப் பேரலைகள் என்றால் என்ன?
17. பசிபிக் நெருப்பு வளையம் பற்றிக் குறிப்பு வரைக.
18. தொங்கும் பள்ளத்தாக்கு என்றால் என்ன?
19. ஆப்ரகாம் லிங்கனின் மக்களாட்சிக்கான வரையறையைக் கூறுக.
20. எந்த ஒரு நாட்டினுடைய முதன்மை வளமாக மனிதவளம் கருதப்படுகிறது. ஏன்?
21. சூரிய சக்தி என்றால் என்ன?

III. விரிவான விடையளி (ஏதேனும் 5 மட்டும்) (வினா எண். 28 கட்டாய வினா) 5x5=25

22. கோடிட்ட இடத்தை நிரப்புக
(i). An Uncertain Glory என்ற புத்தகத்தை எழுதியவர் ..............
(ii). சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமர் ................ ஆவார்.
(iii). பழங்கற்காலத்திற்கும் புதிய கற்காலத்திற்கும் இடைப்பட்ட காலம் .................. எனப்படும்.
(iv). ............... என்பது மனிதத் தலையும் சிங்க உடலும் கொண்ட கல்லால் ஆன மிகப்பெரிய உருவம் ஆகும்.
(v). செள அரசின் தலைமை ஆவணக்காப்பாளர் ....... ஆவார்.

23. பொருத்துக

I. இக்னிஸ் - தேரி
II. பாரோ - 18
III. செம்மணல் மேடுகள் - வனவிலங்குகள் பாதுகாப்புச் சட்டம்
IV. வாக்குரிமை - நெருப்பு
V. 1972 - எகிப்திய அரசர்

24. சிந்துவெளி நாகரீகத்தின் மறைந்த பொக்கிஷங்களைப் பற்றி எழுதுக.
25. புவி அமைப்பை விவரி.
26. வானிலைச் சிதைவு என்றால் என்ன? வகைப்படுத்துக.
27. மக்களாட்சியில் உள்ள சவால்கள் யாவை?
28. புதுப்பிக்கத்தக்க வளங்கள் மற்றும் புதுப்பிக்கத்தகாத வளங்களை வேறுபடுத்துக.



Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com